முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.52/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியா | கணவர் பெயர் | சக்திவேல் |
| கிராமம் | நன்னிலம் | வட்டம் | நன்னிலம் |
| தொழில் | | வயது | 37 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் நன்னிலம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நன்னிலம் தாலுகா, செம்பியநல்லூர் கிராமம் நன்னிலம் வட்டாட்சியர் எல்லைக்குட்பட்டது. செம்பியநல்லூர் கிராம புல எண் 154/19B ல் பரப்பளவு 0.03.21 ஏர்ஸ் மற்றும் புல எண் 154/20A2 ல் பரப்பு 0.00.65 ஏர்ஸ் நிலங்கள் அய்யம்பெருமாள் மனைவி ரேவதி என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி பட்டா எண்கள் 91, 889 வின் கணினி நகல்கள் முறையே **Ex.X1, Ex.X2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் வட்டாட்சியர்

அலுவலகத்திலிருந்து வருவாய் கோட்ட அலுவலருக்கு பட்டா மாற்றிய பிறகு எழுதப்பட்ட கடிதத்தின் பிரதி **Ex.X3**. 18.03.2024 தேதியிட்ட வருவாய் கோட்ட அலுவலக கடித நகல் **Ex.X4**.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)**

பட்டா மாறுதல் செய்ய கோரி ரேவதி என்பவர் வருவாய் கோட்ட அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தார். வங்கியில் கடன் வாங்க போவதாக தன்னை அழைத்து சென்று ஏமாற்றி செட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டதாக தெரிவித்தார். சாதாரணமாக பட்டா மாறுதல் குறித்து மேல் முறையீடு செய்யும்போது பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றால் அது அந்த அலுவலகத்தில்தான் கொடுப்பார்கள். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் விசாரித்து அறிக்கை அனுப்பியுள்ளார்கள். அந்த அறிக்கையை பெற்று வருவாய் கோட்டாட்சியரிடம் சமர்ப்பித்தோம். அதன் பேரில் வழங்கப்பட்டதுதான் Ex.X3. Ex.X3 வழங்குவதற்கு முன் அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை எதுவும் பெறவில்லை. Ex.X3 ல் 27.07.2024 அன்று கையொப்பமிட்டு தேதி குறிப்பிட்டு அப்போதைய வட்டாட்சியர் அனுப்பியுள்ளார். கோப்பின் அடிப்படையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். Ex.X3

அனுப்புவதற்கு முன்பு தாவா வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமாக நான் நேரில் ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் கிராம நிர்வாக அலுவலருக்கு தெரியும். தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் துணை விதி 4(3)ன்படி உரிமை மூலம் பற்றி வழக்கு நிலுவையில் இருந்தால் வட்டாட்சியர் பட்டாவை ரத்து செய்ய சட்டத்தில் இடமில்லை எனவும் உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அனுப்ப வேண்டும் எனவும் சொன்னால் தவறு. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் அறிக்கையின்படி பட்டா ரத்து செய்யப்பட்டது. அதிகாரம் இல்லாமல் பட்டா ரத்து செய்யப்பட்டது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

நாளது தேதி வரை ரேவதி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.17 14:57:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

**O.S. No.52/2024**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனிமொழி | கணவர் பெயர் | விஜயராஜ் |
| கிராமம் | செம்பியநல்லூர் | வட்டம் | நன்னிலம் |
| தொழில் | | வயது | 35 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 3 ஆண்டுகளாக தாவா சொத்து அமைந்துள்ள செம்பியநல்லூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வாதியின் சொத்துக்களுக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டு விசாரணைக்கு பின்னர் ரத்து செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும். Ex.X3 தான் அது. புல எண் 154/19B ல் பரப்பளவு 0.03.21 ஏர்ஸ் மற்றும் புல எண் 154/20A2 ல் பரப்பு 0.00.65 க்கு விசாரணைக்கு பிறகு ரேவதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. தற்சமயம் பட்டா ரேவதி பெயரில்தான் உள்ளது.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)**

மனு யார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. விசாரணைக்கு பின்தான் நான் பணியில் சேர்ந்தேன். Ex.X3 ல் இவ்வினம் தொடர்பாக மனுதாரரின் இளைய மகனை தொடர்பு கொள்ள முற்படும்போது மேற்படி நபர் ஊரில் இல்லையென தெரிவித்துள்ளோம். எந்த வகையான தொடர்பு என்று குறிப்பு இல்லை என்றால் சரி. இந்த வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. மனுவில் தன்னை ஏமாற்றி செட்டில்மெண்ட் எழுதி வாங்கி கொண்டதாக சொல்லிதான் வாதி பட்டா மாறுதல் வாங்கியுள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் டீடை செல்லாது என கோரிதான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. யார் யாரை விசாரித்தேன் என்ற விபரத்தை அந்த விசாரணை அறிக்கையில் வெளிப்படுத்தவில்லை. சரிவர விசாரணை செய்யாமல் மனுவின் அடிப்படையில் ஒரு சார்பாக அறிக்கை சமர்பித்துள்ளேன் என்றால் தவறு. தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம் துணை விதி 4(3)ன்படி உரிமை மூலம் பற்றி வழக்கு நிலுவையில் இருந்தால் வட்டாட்சியர் பட்டாவை ரத்து செய்ய சட்டத்தில் இடமில்லை எனவும் உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அனுப்ப வேண்டும் எனவும் சொன்னால் தவறு.

**குறுக்கு விசாரணை (2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)**

நாளது தேதி வரை ரேவதி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.17 14:57:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.